கடவுள் துணை.

பக்தி ரச

நற்சுவைக் கீதம்.

(முதற்பாகம்)

உசிலம்பட்டி
கனம் K. வேதநாயகம் உபதேசியாரவர்கள்
குமாரர்
V. பால்டேவிட் அவர்களால்
இயற்றியது.

...ிகை பிரஸ் பிராஞ்சு,
...லம்பட்டி,
... 1931. [அணா 2.

CR2:417
1N31
175524

372

கடவுள் துணை.

பக்தி ரச

நற்சுவைக் கீதம்.

(முதற்பாகம்)

உசிலம்பட்டி
கனம் K. வேதநாயகம் உபதேசியாரவர்கள்
குமாரர்

V. பால்டேவிட் அவர்களால்
இயற்றியது.

ஸ்ரீமீனாம்பிகை பிரஸ் பிராஞ்சு,
உசிலம்பட்டி.

விலை] 1931. [அணா 2

INTRODUCTION

BY

Rev. J. S. MASILLAMONY, B. D.,

LECTUROR AND TAMIL PANDIT,

UNION THEOLOGICAL SEMMINARY,

PASUMALAI.

I have seen the little booklet of songs called Bhakti Rasa Narchuvai Githam sung by Mr. V. Paul David of Usilampatti, Madura. The songs have been composed in excellent tunes which are being delightfully sung everywhere in the Tamil Country.

I am glad to recommend this book to all Tamil Christians and others and trust that they shall advantageously use this in Schools, Sunday schools, C. E. Meetings and so on.

(Sd) J. S. MASILLAMONY.

22—9—31.

ஆக்கியோன் உரை.

மாயையிலும் மாயையான இப்பிரபஞ்சத்தினிற் யான் பிறந்து, வளர்ந்து, அறிவு தெளிந்தவுடன், இப்பூவுலக மாயைகளான காம, குரோத, லோப, மோஹ, மத மாச்சர்ய, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூயை முதலான குணங்கள் என்னுள் பொருந்திருக்கக்கண்டேன்.

நானடைவில் முத்தியடையக்கூடிய ஞான மார்க்கம் பக்தியே யென்று ஆராய்ந்து கிருஸ்தவ சத்ய வேதம் ஓர்வழி காட்டி யென்று முணர்ந்தேன். இத்தகைய சத்தியவேத நூல்கள் நம் நாட்டினிற் பலவாகக் கிடைக்கின்றன. ஆகலின் இவற்றுள் பகவானை ஸ்தோத்தரிக்கவும், ஐக்கியப்படுத்தவும், ஜெபத்தினால் இருதயத்தைப் பக்திக்கேதுவாக்கவும், அப்பக்தியும் நானடைவில் ஓங்கி வளர்ந்து பல நற்கனிகளைக் கொடுத்து என் மனதில் நல்லுணர்ச்சி உண்டாக்கவும், பல பக்திரச பாக்கள் என் மனதை ஊக்கியதனால் யானும் அவ்வாறே என் எண்ணம் ஈடேறுமாறு, சிலபாக்களால் கடவுளை ஸ்தோத்தரித்து ஆனந்திக்கலாமென 'பக்தி ரச நற்சுவைக் கீதம்' என்னும் இச்சிறு நூலை இயற்றலானேன்.

இந்நூலில்காணும் பாடல்கள் பஜனைக்கோஷ்டிகளிலும், மற்ற விழாக்களிலும் பாடி ஆனந்திக்குமாறு, தற்கால நவீன, மெட்டுகளால் பெரும்பாலும் அமைத்துமுள்ளேன். இந்நூல் கிறிஸ்வ சமூகத்துக்கு அருள், அன்பு, கல்வி, கேள்வி, நீதி, உருக்கம், தயை, பொருமை முதலான விஷயங்களில் மேம்பட்டு வழங்கவும், பக்தியையும், ஞானத்தையும் உண்டாக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

குறிப்பு:—இத் தெய்வ பாக்களில் என் அறியாமையினால் ஏதேனும் குற்றங்கள் இருக்குமாயின் பெரியோர்கள் அவை, இவையென தெரிவித்திடில் அவற்றை மறுபதிப்பில் திருத்தியமைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மற்றும் இந்நூல் வெளியேற்றும் பொருட்டு எனக்குச்சகல வித ஆலோசனைகளும், உதவியும் புரிந்த என் நண்பர்கள் யாபேர்க்கும் என் மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறேன்.

இங்ஙனம் தங்களன்புள்ள

வே. பவுல் தாவீது,
உதவி உபாத்தியாயர்,
போர்டு ஆண் பாடசாலை, ஆண்டிபட்டி.

பக்திரச நற்சுவைக் கீதம்!

கடவுள் துதி.

நேரிசை வெண்பா.

நித்தியமாய் நிஷ்களமாய் நீடூழி காலமதாய்
முத்தியதாய் நின்றதனி முன்னோனை—பத்தியதாய்
எப்பொழுதும் போற்றி இறைஞ்சி மனமுருகி
மெய்ப்பதத்தை மேவிநிற்போம் நாம்.

இயேசு நாம துதி.

மந்தைகளைக் காத்துநிற்கும் மாவிடையர் தங்களுக்கு
அந்தரத்தில் செய்தி அறிவித்தான்—செந்தூதன்
பந்தமதைத் தீர்க்கப் பரனார்தாம் மன்னுருவாய்
வந்துதித்தார் பெத்தலையில் மாண்பு.

நூல்பயன்.

பக்திதரும் முக்திதரும் பாவவினை யேயகற்றும்
சித்தமதை ஓர்நிலையாய்ச் சீர்திருத்தும்—உற்றகவி
வானவன் தாவீது வழுத்திய சத்கீதம்
மாணப்படிப்பவர்க்கு மாண்பு.

1. வாந்தரவேண்டல்.

"சாதாமுக குகா" என்றமெட்டு.

இராகம்—தோடி. தாளம்—ஆதி.

பல்லவி

வா வர மருளவே—வான்சுரனே (வா)

அனுபல்லவி

தா தருணமீதுநல் துணையெனக்குத்
தர வீதரசே உன்னைக் கூவியழைத்தேன் நானே

சரணம். (வா)

மாமறை வாசகனே மனானுகூலனே
மரியின்சுதனே மகிமையுபர்வே
தாமதமேனோ மஹா தலமகிபனே
தாசாதி தாசனெனைத் தற்காத்தருள் புரிய(வா)

2. கடவுள் துதி.

கந்தா காருண்யனே - என்றமெட்டு.

இராகம்—இந்துஸ்தான் காபி. தாளம் ஆதி.

பல்லவி

விண்ணோர் மா மணியே
விநோதி இனியே

அனுபல்லவி

கண்ணே நவ மணியே
காருண்ய கனியே (விண்)

சரணம்.

மாசில்லாத அன்னை மேரியின்
மைந்தனே வடு வைந்தனே
தேவலாகிய யேசியாமெனும்
தேவனே திரு மூவனே. (விண்)

பாட்டெடுப்பு.

தூய பரம் பொருளே
துணை கூர் அருளே
தேவே மரி மகனே
தேற்றுவாய் பரனே (விண்)

சரணம்.

ஆட்சிசேர் பரி சுத்தர்போற்றிடும்
அன்பனே நரர் இன்பனே
சாட்சியாய் சுவி சேஷஞ் சூழ்ந்திடும்
சத்யனே சர்வ நித்யனே [விண்]

பாட்டெடுப்பு.

பாலனின் துதியே
பரன் நீ கதியே
சாலே மா நிதியே
சாலோக பதியே. (வின்)

3. கலிலோ—என்ற மெட்டு.

இராகம்—ஆபேரி தாளம்—திரிபுடை

பல்லவி

பரலோக பதிபரி சுதனையே
பாடுவாய் தினம் மனமே பவமோடுமே (பர)

அனுபல்லவி.

கருணாகரன்! கனிவுடன் சிலுவையில்
கடுபவம் நீத்தவனைக் குருபரனைப் (பர)

சரணம்

வேதா திரு வேதநாயகனே வேண்டினேனின்பதமே
—இன்னும்
கோவே நின்கோதில்லா வரவைக் கோரினே
னனுதினமே
அதிகார அலகையை அழித்திடும்
ஆரண அற்புதனைக் குருபரனைப் (பர)

ஞானசார விசாரபடலம்

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
15	11	சர்ர்ந்த	சார்ந்த
,,	22	தரித்தோனே	தரித்தோனு
26	16	பொருளாய	பொருளாய்

4. காலை வணக்கம்

1. "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியை அறிவிக்கிறது."

சங். 19:1.

2 "வேதமே வெளிச்சம், போதசிட்சையே ஜீவ வழி"

நீதி 6. 23.

முத்திநெறி யறியாத—என்ற மெட்டு.

இராகம்—ஆரபி. தாளம்—ஆதி

1 காலையிலே துயிலெழுந்து கடவுளையே துதித்து வந்து
வேலையிலே சார்வு பெற்றால் வேண்டுவன கைகூடும். (கா)

2 நித்தியனும் நிமலனையே நீடூழிபோற்றி வந்தால்
சத்தியமாய் சாயூச்சிய ஸ்தலமுமே நாமடைவோம் (கா)

3 சேயன்தன் தாயுடனே சேர்வதையே நீ நாடு
தூயபரன் ஏசுவிடம் துரிதமுடன் நீ ஓடு (கா)

4 ஜீவன் சுகம் மெய்பெலனும் தீர்க்காயுளு மளித்தவனை
ஜீவாமிர்தம் உண்பதுபோல் ஜெபம் செய்து ஜீவிப்போம்.
(கா)

5 சத்தியமே ஜீவ வழி சத்தியத்தை நீ நேசி
பத்தி செய்தால் பவமோடும் முத்தியடைவாய் நிஜமே (கா)

5 கிறிஸ்துவின் பெருமை

தசரதராஜ குமாரா — என்ற மெட்டு
இராகம் — காபி   தாளம் — ஆதி.

பல்லவி

விண்மண்டல முறையும் ராசா — சருவேசா
மறைவாசா — கண்பார் ஈசா (விண்)

அனுபல்லவி.

பண் தரும் தூதர்கள் போற்றிடும் தேவா
பதிவளர் யெருசலேம் உறைந்த பொற்பாதா
விண்ணொளி துலங்குமுன் திருவருள் தாதா
மேதினிபுகழ் நசரேயா யேசு நாயகா
மரிசேயா அருள்நேயா (விண்)

சரணம்.

சர்வலோகாதிப மா அதிகாரா
சாத்தனின் கோட்டத்தைத் தணித்த சம்ஹாரா
சரணபதமடைந்தேன் — தந்திட வாராய்
சாயுட்சிய சர்வனுகூலா அதிலோலா
மனுவேலா வந்தாளாய் (விண்)

ஸ்ரீராம பாதமா — என்ற மெட்டு.
இராகம் — ஹமிர்தவாஹினி.   தாளம் — ஆதி.

பல்லவி

ஸ்ரீயேசுநாமமே தீர்க்கும் வினையாவுமே
கீர்த்திப் பிரதாபமே, (ஸ்ரீயே)

அநுபல்லவி

பூரிகை தூபா! புவிதனில் வந்தவா
ராஜ ராதி ராஜகுல நல்தாவீதின் மைந்தனே
(ஸ்ரீயே)

சரணங்கள்.

1 காரண நிதியே கல்வியின் ஒளியே
பூரண சாலவுமதீ ஆரண சுத நபீ
பூதவனர் மனு நீதிப் பிரகாச
மானிதன்ய சேயனே தியான மோனபாகமே (ஸ்ரீ)

2 நாத பூத பௌதிக நாவலன் நீயே
நபயும் பவுல் தாவீதின் நாயகன் நீயே
பூதலமமர்ந்தாய் போற்றிடச்சிறந்தாய்
புண்ணியனே என்னை உய்ய கண்ணியமாய்
எண்ணுவாய் (ஸ்ரீயே)

7 நெஞ்சறி வுறுத்தல்

1. "சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியா யிருக்கும், கர்த்தனைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது." சங். 34: 10

2. தேவன் அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்.

சங் 46:1.

மார்த்தாடப் பாரதேனே:—என்ற மெட்டு
இராகம்—கமாசு தாளம் ஆதி.

பல்லவி

தேவனைப் போற்றிடுவாய்—ஓ மனமே நீ
தேவனைப் போற்றிடுவாய்

சரணங்கள்.

1 பாவத்தைதீரென்று பாடித்திரிவோர்க்கு
ஜீவதண்ணீர் கொடுத்து தீரட்சித்திடுவார் [தே]
2 சிங்கக்குட்டிகள் தாழ்ந்து பட்டினியிருந்தாலும்
பங்கமடையார் தேவ பாலனைவோர்களும் [தே]
3 ஆபத்துக்காலத்தில் அடைக்கலமாவாரே
அண்டிப்பிழைப்போர்க்குப் படைக்கலமாவாரே [தே]

3. இரட்சணியவேண்டுதல்.

தயவில்லாத தேனவஞ்சம்—என்ற மெட்டு.
இராகம் சுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி

கருணை தெய்வ குமாரா இது
தருணமீதிலே தயை புரியே கெம்பீரா (கருணை)

அனுபல்லவி

பரமஞான திரு சுதனே!
பரிவுடனே நீர் பரம ஏழை யென்னை
பவம் விட் டகல அருளும் குருபரனே (கரு)

சரணம்.

பக்தர் கொண்டாடிடும் பரலோக பதியே
பாவிக்கிரங்கிடுவாய் பரமுரு மதியே
சித்தம் வைத்திரங்கிடாய் சித்திரியேசு
அத்தனின் துதி நித்தமும் கதி
அமலன் பொற்பாதம் அனுதினம் நாடினேன்
(கருணை)

"நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்"
சங் : 17.15.

9. அம்பா ளென்பால் என்ற மெட்டு.

இராகம் அடாணு. தாளம்—ஆதி

பல்லவி

நித்யானந்தா! நிமலா! நிதிப்பிரதாபா (நித்)

அனுபல்லவி

பொற் பாதந்தா பூமா! சீமா!
பொன்தா ளினைப் பணிந்தேன் திவ்ய (நித்)

சரணங்கள்

1 அன்பா அரூபி ரூபி—நீ
என்பால் சொரூபி நேமி
உன்பாதம் நம்பினே னினி
உரைத்தேன் மனம் கரைத்தேன் திவ்ய (நித்)
2 வந்தேனுனை நம்பியே தினம்
எந்தாயே என்றனன் உனை
சிந்தா குலமே தவித்தருள்
சீலா மனு வேலா திவ்ய [நித்]
3 சொல்லால் மனுவாக வந்த நீ
நல்லாய னென உரைத்த நீ
வல்லா! பால் தவீது மைந்தனும்
வாழ் வுற்றுநின்—தாழ் பெற்றிட—திவ்ய [நித்]

10. புவினி தாஸ-டனீ—என்ற கீர்த்தனை மெட்டு
இராகம்—ரஞ்சனி. தாளம்—ஆதி.

பல்லவி.

புவன மீதுறைந் தோய் போனந்தா!
பொங்கு மின்பமான புண்ய மூர்த்தியே [புவன]

அனுபல்லவி.

தவ லோலமே! தனி கா சாலமே!
தாசன் நம்பினேன் சம்ப்ரப்ரவாகமே [புவன]

சரணம்.

ஜீவ காருண்யனே ஜெகம்புகழ் கண்யா
ஜோதிமயமான ஜெய ஜேசு பாலா
பாலன் ரஞ்சனி ராகமாம் சாஹித்யம்
பாங்குடன் கேட்டால் பதி தனிலே நித்யம் [புவன]

11. சின்னநாட்டனு என்ற கீர்த்தனை மெட்டு
இராகம்—கலாநிதி. தாளம் ஆதி.

பல்லவி.

அன்பு தாசுதா! காஷி தந் தாளவாரிதா [அன்பு]

அனுபல்லவி.

இன்பங் கூறையா இதுதிசாயல் தூபா
அன்பக்தினையா தூதர் ஆடுமெய்யா (அன்பு)

CR2:417 (18)
175524

சரணம்.

எந்தன் மனம் பாடும் ஏகனே நினைவோடும்
வந்து காத்தருள் நீடும் மனது மாமருள் கூடும்
பந்தம் விலகாதா பாவிபரிகாரா
துன்பம் மாற்றும் மருகா துயரந்தீர வருகா (அன்பு)

12. சரச சாமதான—என்ற கீர்த்தனை மெட்டு.

இராகம்—காபி நாருயணி. தாளம்—ஆதி.

பல்லவி

பரம தேவ பாலா பார்த்திபா சுசீலா
பாது காத்தருள்வாய் பாக்ய மரி சிலா (பரம)

அனுபல்லவி

சரச மாயைகள் உரகங்கொண்டாளாமல்
சரண் புகுந்தேனுன்னை சுரர்பதிகண் பாராய் [பரம]

சரணம்.

விண்ணுலோக வீரா வினைதீர் கெம்பீரா
மண்ணுள்ளோர்க் காதாரா மாமனோஹரா
அண்ணலாம் ஏசுவே! அன்றமின்று மும்மை
வண்ணம் பாடியே பால் வாழ்த்துதல் செய்கிறேன் [பா

13. ஆசிரிய விருத்தம்

உன்னதன் ஒருவனுண் டென்றெண்ணியுருகாத
உலுத்த னுலகேன் பிறந்தான்
உலகத்தில் பாவமில்லாதவ னிலையென்று
உணராதா னிருந்துமென்ன
தன்னையே பாவியென் றறியாமற் வஞ்சித்த
தனைத் தேவ சமத்வ னென்று
தற்பெருமையே கொண்டு கர்வமாய் நடக்கின்ற
சண்டாளன் இருந்துமென்ன
அன்னையாம் அர்ச்சகிஷ்ட கன்னிமரியாளிடம்
அவதரித்துப் பிறந்த
அய்யனைப் பவந்தீர்த்த மெய்யனை மனத்தினில்
அர்ச்சிக்கான் இருந்துமென்ன
நன்னயம் நல்மார்க்க போதகனை நம்பாத
நரன் வாழ்வு பெற்றுமென்ன
நாயனு மேசுவை ஆண்டினு னென்னாளும்
நற்பதவி அடைகு வானே.

---

14. "ரகுவம்சசுதா" என்ற கீர்த்தனை மெட்டு.

இராகம்—கதன குதூகலம். தாளம்—ஆதி.

பல்லவி

திருவேசுரா! திருமறைவாசா!
திவ்ய திரியேகா! தீதில்லா யெகோவா! (திரு)

அனுபல்லவி

கிருபா கரா! அருள் தாபரா
கெம்பீரம் துலங்கும் துந்துமி முழங்கும் (திரு)

சரணங்கள்.

மைந்தன் பதந்தானே வந்து பணிந்தேனே
எந்தன் வினைதானே வந்துதீர் என்கோனே
மண்டலாதிபா! மனுநீதி நேமா
எண்டிசை ரட்சண்பா ஏசுவென்ற நாமா (திரு)

2

அதிகாரவீர அமலாலங்கார
திரிசேர் சம்பூரா நிமலா விஸ்தாரா
அதிமாமணி! தானே நீ புரி
சதி நீக்கிட பால் தவீதுராஜ்காரி (திரு)

15. தொலினே ஜேஸின்ன பூஜாபலமு என்ற மெட்டு.

இராகம்—சுத்தபங்காளா. தாளம்—ஆதி.

பல்லவி

அருணோதயமே! அருளே வாமே
ஆவலாய் உனையே அடி பணிக்கேனே (அரு)

அனுபல்லவி.

திருவாசகனே உருகினேன் நானே
ஒரு வாசகமே ஓதுவாய் தினமே. (அரு)

சரணங்கள்.

அடியேன் கடையேன் அண்டினேன் உமையே
ஆவியால் இன்றே எனை ஆதரிப்பாயே
படியோர் பிழைக்க பாமீதெழுந்த
பரிசுத்தனே ஐயா பாவமன்னிப்பளிப்பாய் (அ)

2

நித்தமும் துதித்தேன் நீதியின் போதா
இத்தரை மீதிலுனக் கிணையேது நாதா
நத்தினே னுனையே நாடினேன் நீகா
முத்திகொடுத்திடுவாய் மூதாதை வேதா (அரு)

3

தாரணி தன்னிலுன்னைத் தஞ்சமென்றடைந்தேன்
தாராய் துணை நீயித் தருணமே வந்தேன்
மாரா வல்வினை மாற்றிடும் மாதா
பாராய் பால் தவிது போற்றிடும் வேதா (அரு)

16. பாங்கான மயிலே – என்ற மெட்டு.

இராகம்—ஆனந்த பைரவி. தாளம்—ரூபகம்.

பல்லவி

பூமேரி மைந்தனே புகழ் உகந்தனே
தினந்தொழுதனே திருவருள் புரிகுவாய் (பூ)

அனுபல்லவி.

பா விமோச நாயகா பார்மரி பாலா
பூதரின் சகாயா பவியெனக்கருள் புரி
(பூ)

சரணங்கள்.

வசிக்கும் பக்தர்கள் மலரடி தினந்தொழும்
புஜிக்கும் லேவியர் பூரண பணிகொளும்
கசித்தெழுமணி எருசலேம் நகர்பதி
முசிப்பழம்பதி யுகந்தெழும் பரன் சுதன் (பூ)

2

மதித் தெழும் பதி எருசலேம் நகர்தனில்
துதித்தெழும் பல் காபலி நடைபெறும்
விசித்திரந்தனே அறிவது எளிதில்லை
சுசித்தறிந்திடில் ஞானமேயடைகலாம் (பூ)

3

அந்த நாளையில் மந்தையின் பாகமே
சிந்தையே பகிர்ந் தகந்த தெய்வமே
இந்த நாளையில் உந்தன் மைந்தனைப்
பந்தமாகவே பணியுகந்தவா (பூ)

4

பாவியில் பெரும் பாவியாகிய
கோவியில் பெரும் கோவியானநான்
தாவியே உனைத் தாவி வந்தனன்
தவீது பால் கவி உகந்து கேளுமே. (பூ)

17. பிழையுணர்ந் தோதல்.

முருகன் திருமால் மருகன் பேருடை— என்ற மெட்டு
இராகம்— அடாணு. தாளம்—ரூபகம்.

பல்லவி

பரனே பராபரனே வருக— திரு
பாத்திர யூதாவின் நேத்திரனாகிய (பா)

மகுடங்கள்.

1 பற்குண முற்று மகற்றி
நற்குண சக்தி யெனக்கருள் (பா)

2 யோக நற்குண மாதுபெற்ற நல்
தூய னேசெனும் நாமமே நமா [பா]

3 சத்ரு பசாசை அழித்திட
மித்ரு குருசில் மரித்தவா (பா)

அனுபல்லவி

அறிபாரோ உந்தன் அன்பின் அளவினை
அளவிட்டிட முடியாதென
அறைபுற்றதே மறைமுற்றுமே. [பா]

சரணம்.

எப்போது முன்கூட இருப்பே னென்று சொன்ன
இயேசு ரட்சகனே — அந்த
அற்புத வாக்கின் படியே என்னுளும்
அமர்ந்திடுவாய் பரனே
ஐந்தப்பம் (இ)ரண்டுமீன் கொண்டு அநேகர்க்கு
அன்னம் அளித்தவனே — எந்தன்
சிந்தை மகிழ்ந்திட உந்தன் கிருபையை
ஈந்திடு மென் அய்யனே
அத்தா எனக்கரி சித்தா நித்யானந்தா
ஆவியை ஈந்தருள் நேமி தயானந்தா
அந்தர வான் புவி ஆளுந்துணந்தா
அடிமைக்குண தநி நித் திடி
மனதுற்றா வா மொய்த்தருள் [பா]

18. முருகனிட மேன்முறை சொல்வாய் என்ற மெட்டு.

இராகம்—காம்போதி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

தருணமிது வுன் தயைபுரிவாய் பரனே (தரு)

மகுடங்கள்

1 உல கலகை இல குதகை
எனையடிமை கொளவருதே (தரு)

2 என்னுயிரும் உடல்பொருளும்
உன் மேவியே அடிமைகொள (தரு)

3 தஞ்ச முன்தன் பதமருளே
மிஞ்சும் பவ வினை மிதமற (தரு)

4 உந்தனிடம் வந்தவனைச் சந்ததமும்
சிந்தையுடன் எந்தவிதமுந் தள்ளிரே (தரு)

5 பூதலத்தி லேயுதித்த வேத சத்ய
நீதிநித்ய லோக துத்ப சோதிசுத்பா (தரு)

6 நம்பி வந்தனன் நின் பதந்துணை
அன்பு கூர்ந்தெனை ஆர்வதுன் கடன் (தரு)

அனுபல்லவி

திரிபுலவளர் மனு பவ மற
ஸ்ரீவிளையாட லெருசலேம்பதி
சுதமெனவந்த திருமனுவேலனே
பக்தர் போற்றுமிப் பாவலர் துதி
சுத்தாட் சண்யனே! இத் (தரு)

சரணம்.

ஆதியந்தமும் இல்லாத பரம் பொருள்
அப்பனே உந்தன் அடிமையான் காத்தருள்
சோதிப் பிரகாசனே நின் பதம் சேர்த்திடும
தூயனே கல் யாண் கேயனே
தொண்டன் அன்புடன் வந்தனம்
தொடுத்தேன் எடுத்தேன்
முப்பத்தெட்டு ஆண்டுகளாய்
எட்டிகட காதிருந்த துட்டன் மீதிலேயிறங்கி
முற்றுங் குணமாக்கி வைத்தா யித் (தரு)

19. ரேங்க ரசக் கேளி என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தானி. தாளம்—ஆதி

பல்லவி

விரிகுல மரி பா லகனே—தின
ஒகி னேனே நானே [விரி]

அனுபல்லவி.

திரு மலர் உனதடி தாழ் பணிந்தேனே
சிந்தை செய்வேன் நானே (விரி)

தொகையரு.

தினகர தயாளும் நீ திரியேகக் குருவும் நீ
தீன தயாளும் நீயே
திங்கள் பிரகாசி நீ எங்கும் ஒளிவீசும் நீ
திரு ஸ்ரீ விளையாடும் நீயே

பாட்டெடுப்பு.

அரு சுந்தர பெஞ்ஞான அருந்தமிழ் மாலிகா
அருளே பொருளே ஆயே [விரி]

20. அற்புதப் பூதம் மகளாகிய என்ற மெட்டு.

இராகம்—வாளி. தாளம்—ஆதி.

கிஞ்சித நெஞ்ச மனந்துதி நேச மகிழ்ந்தருள்
சீர்பதமே—நானுன்
கஞ்ச மலர்ப் பதம் அஞ்சலி செய்திட காதலருள்
வரமே
நஞ்சக மல்கிய வஞ்சக வல்வினை மிஞ்சிடாமலே—
மற்றும்
சஞ்சல மாற்றி நின் மிஞ்சிடும் செஞ் சொல்சாமி-
வரமருளே

பூரண உன்னத மைந்தா—அதி
காரண கற்பித எந்தா
தாரணிதன்னி லுகந்தா—ஆ
தாரந் தருமா னந்தா
செந்தமிழ் செப்பின சிந்து தமிழ் கவி ஜே! ஜே! ஜே!
[கிஞ்]

21. பக்தி.

இனி நம்பிக்கை கொண்டெல்லோரும் என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி.

பய — பக்தியுடன் முக்திபெற
பரனைப் பாடுவோம்
பரனைப் பாடுவோமே—ஏசு
பரனைத் தேடுவோம். (பய)

சரணம்.

மகதனு யரி முன்னாள்—உன
தடிமையாய் வந்த பின்னாள்—மன
மகிழ்வுடன் பணிவுடன்
மனத்திலும் குணத்திலும் மாறினாள்பாவை (பய)

விருத்தம்.

வான ஜோதி மணியையு மெண்ணலாம்
வையமேல் தரு மலரையு மெண்ணலாம்
ஆன ஆழ் கடல் வாழுயி ரெண்ணலாம்
அலைகடல் கரை அணுக்களை யெண்ணலாம்
தீன மாமழைத் திரளையு மெண்ணலாம்
செய்ய மாந்த ரிடர்களை எண்ணவோ
ஞான நாவுடை யாரவர் அஞ்சுவார்
நற்சுதன் கொடும் பாடலை தீர்க்குமே.

பாட்டெடுப்பு.

மண்டலம் அண்டினோர் உய்யே—திரு
மாசில் இனந்தரு மெய்யே—பல
மாகிய வினையறும்
மையில்லாப் பொருள் சேருமிச்சேவை— (மம)

22. மோட்சத்தின் சிறப்பு.

காக்ஷி கண்காக்ஷியே என்ற மெட்டு.

இராகம்—கமாசு தாளம்—ஆதி.

பல்லவி

மோக்ஷம் விண் மோக்ஷமே—திரு ஒளி நிறைந்த
விண் [மோ]

அனுபல்லவி

சூரக்ஷ மிலங் கிடும் பர
ஞாக்ஷி செய்யுங் காக்ஷியான [மேரு]

சரணங்கள்.

ஆதாவாய்ப் பாவிகளை அரவணைக்குந்தேசமே
அன்பு கூர்ந்து கண்ணீர் யாவும் அறத்துடைக்கும்
நேசமே

ஆனந்தமே கொண்டு மனமகிழ்ந்து—அதி
புனித தூதர் கணம் சூழ்ந்து —மகிழ்ந்
தேதுதி பாட லன்பு கூர்ந்து
துதி ஒளியின் வீரம்
இணையற்ற கெம்பீரம்
தனைச் சொல வோர் நேரம்
ஓர் நாளு மம ராத திது (மோ)

2

வானமே சிங்காதன மவரமையு மாசனம்
மகிதலமே பாதமென சாலமோனின் பூஷணம்
கோடா கோடி தூதர் சூழ்வுற்று—பரி
சுத்தர் சுத்தர் என்று மகிழ்வுற்று—இது
என்ன மகிமை யென்றளவுற்று
சேரா பீன்களின் பாட்டு
சுவிசேஷங்களின் கூட்டு
பவுல் தாவீதின் பாட்டு
சொல் சத்தியத்தின் கோட்டு—திரு (மோ)

3

சந்திர சூரிய ரளி யேதுமில்லை தேவனின்
சத்தியமே நித்ய பிரகாச வொளி வீசுபன்
எந்த வித மரணமு மில்லை — அங்கு
வியாதி பிணி கவலைகளில்லை — கொடும்
பாவ லகை சோதனையுமில்லை
நித்திரை யில்லா பூஜ்யம்
ஜெகத்திலுள்ளோர் பாக்யம்
புத்தி மிகு மா ரோக்யம்
புனிதமான ராஜ்யமிது— (மோ)

23. மங்களம்.

சரி சரி சாமுத்திரி என்ற மெட்டு.
இராகம்—தேசிகம். தாளம்—ஆதி.

பல்லவி

வாழ்கவே வாழ்கவே—
வானர் போற்றும் தேவ சேயன் (வா)

அனுபல்லவி

எங்கும் மகிழ் பொங்கும்படி
திங்கள் மணம் தங்கும்படி (வா)

சரணம்

தரணி வாழ்க தனயர் வாழ்க
தாசர் என்றும் வாழ்கவே
அருமையாய் அல்கையழித்த
ஆதி தேவன் வாழ்கவே
உம்பர் வாழ்கவே—பா
இம்பர் வாழ்கவே
சி[illegible] சேவ[illegible]ர்த்து வந்தாள்குவாய் யெமையே வ

முற்றிற்று

92:417 N37
175524
600 008.

குறிப்பு:— இதன் இரண்டாம்பாகம் கூடிய சீக்கி
[illegible]வெளிவரும்.

பிழைத் திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	15	ஒர்	ஓர்
13	7	வஞ்சித்த	வஞ்சி[illegible]
24	15	சிங்காத	சிங்க[illegible]